செய்தி வெளியீடு எண்–290 நாள்– **25.5.2007**

# செய்தி வெளியீடு
# 25.5.2007

## சென்னைக்கு அருகில் தகவல் தொழில் நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலம் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட நகரியம் அமைக்கும் திட்டம்

## முதலமைச்சர் கலைஞர் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்து

**ஈ.டி.ஏ. ஸ்டார் ப்ராப்பர்ட்டீஸ் டெவலப்பர்ஸ் லிமிடெட் நிறுவனம் துபாய் நாட்டைச் சேர்ந்த ஈ.டி.ஏ ஆஸ்கான் நிறுவனத்தினை சார்ந்ததாகும். இந்நிறுவனமும் டிட்கோவும் இணைந்து தகவல் தொழில் நுட்பத்திற்கான சிறப்புப் பொருளாதார மண்டலம் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட நகரியத்தைக் காஞ்சிபுரம் மாவட்டத்தில் அமைக்க உள்ளது.**

**உலகின் பல பகுதிகளிலும் கட்டுமானப் பணிகள், கட்டடம் மற்றும் சாலைப் பணிகள், மின் திட்டங்கள், வணிகத் திட்டங்கள், கப்பல் சார்ந்த தொழில்கள், துறைமுக மேலாண்மை, மோட்டார் வாகனத் தொழில் முதலிய பல்வகைத் தொழில்களில் ஈடுபட்டுள்ள ஈ.டி.ஏ. நிறுவனத்தின் ஆண்டு விற்பனை மதிப்பு ஏறத்தாழ 16 ஆயிரம் கோடி ரூபாயாகும். இந்நிறுவனம் ஏற்கனவே கட்டுமானம் மற்றும் ரியல் எஸ்டேட் தொழில்களை இந்தியாவில் நிறுவி வருகிறது.**

**தற்போது இந்நிறுவனம் 3750 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 350 ஏக்கர் நிலப்பரப்பில் ஏறத்தாழ 50 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கும் தகவல் தொழில்நுட்பச் சிறப்புப் பொருளாதார மண்டலம் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட நகரியம் அமைக்கும் திட்டத்தை 3 ஆண்டு காலத்தில் நிறைவேற்றிடத் திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தில் 175.30 இலட்சம் சதுர அடி நிலப்பரப்பில் தனித்தனி வீடுகள், வரிசை வீடுகள், மாளிகைகள், வணிக வளாகங்கள், வாகனங்கள் நிறுத்துமிடம், மருத்துவமனைகள், பள்ளிக்கூடங்கள், உணவு விடுதிகள், பணி அறைகள், இதர வசதிகள் அமையும். இத்திட்டத்திற்குத் தேவையான மொத்த நிலத்தையும் தனியார் நிறுவனமான ஈ.டி.ஏ. குழுவே வாங்கியுள்ளதால், அரசு இதற்காக நிலம் எதையும் கையகப்படுத்திடத் தேவையில்லை.**

**காஞ்சிபுரம் மாவட்டத்தில் விரைவான தொழில் வளர்ச்சிக்கு மேலும் உதவும் இத்திட்டத்திற்கான ஒப்பந்தம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் இன்று (25.5.2007) நடைபெற்றது. அவ்வொப்பந்தத்தில் ஈ.டி.ஏ. ஆஸ்கான் நிறுவனங்களின் தலைவர் திரு.சயத் எம்.சல்லாஉதின், டிட்கோ நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு.எஸ்.இராமசுந்தரம் ஆகியோர் கையெழுத்திட்டனர்.**

**இந்நிகழ்வின் போது, மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. ஆற்காடு என். வீராசாமி, தொழில் துறை செயலர் பொறுப்பிலுள்ள திரு.கே. இராஜாராமன், இ.ஆ.ப., நிதித்துறை செயலர் திரு. கே.ஞானதேசிகன், இ.ஆ.ப., ஆகியோர் உடன் இருந்தனர்.**

***

வெளியீடு – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.